3

# தேர்ச்சி: ஒன்று :– இறைவன் மட்டில் நிறை விசுவாச வாழ்வு வாழ்வர்

## 1.3. வாக்குறுதிகளை நிறைவேற்றும் இறைதந்தை







- மேலேயுள்ள படத்தைப் பாருங்கள்.
- இவற்றைப் புரிந்துகொள்ளுங்கள்.

* **இயற்கை அழகானது, எனினும் மனித வாழ்வு இன்றி அங்கு வாழ்வே இல்லை.**

* **இறைவன் ஆதாமையும், ஏவாளையும் படைத்து, அவர்களை ஏதேன் தோட்டத்தில் வாழ வைத்ததையும் சென்ம பாவத்தினால் அவர்களுக்குக் கிடைத்த தண்டனையையும் பற்றி நாம் முன்னர் கற்றுள்ளோம்.**

* **இறைவன் பாவத்தில் விழுந்த மனிதனை அன்பு செய்ய, பாவத்தில் இருந்து மீட்க, மீட்பர் ஒருவரை அனுப்புவதாக வாக்களித்தார். அவ்வாக்குறுதி தொடக்க நூல் 3:15ல் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**உம்மால் இவற்றை செய்ய முடியுமா?**

- கீழேயுள்ள விவிலியப் பகுதியை வாசித்து 'அ' பகுதிக்குப் பொருத்தமானதை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவு செய்க.

**உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய் என்றார்.**

**(தொ.நூ. 3:15)**

| அ | ஆ |
|---|---|
| 1. பாம்பு | 1. ஏவாள் (அமல மரி) |
| 2. தீயோர் | 2. சாத்தான் (பொய்யினதும் தீமையினதும் ஊற்று) |
| 3. பெண் | 3. மனிதன் (இயேசு கிறிஸ்து) |
| 4. பெண்ணின் வித்து | 4. பாம்பு மனிதர்களைக் கடித்து அவர்களைக் கொன்றது (சாத்தான் மீட்பரான இயேசுவைச் சிலுவைக்கு அனுப்பியது.) |
| 5. தலையை நசுக்குதல் | 5. தீமைக்குக் கைகொடுக்கும் தீமை செய்பவர்கள். |
| 6. குதிங்காலைக் காயப்படுத்தல் | 6. மனிதர்கள் பாம்பைக் கொல்லுவர் (மீட்பரான இயேசு சாத்தானின் அதிகாரத்தை உடைத்து விட்டார்.) |

**நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள். அவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர்; நீடிய பொறுமையுள்ளவர். பேரன்பு மிக்கவர்; செய்யக் கருதிய தீங்கைக் குறித்து மனம் மாறுகின்றவர்.**

**(யோவேல். 2:13)**

## கலந்துரையாடலுக்காக:

- தற்கால சமூகத்தில் வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் மனிதன் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் எவை?

இறை அழைப்பை ஏற்ற ஆபிராமுக்கு இறைவன் மூன்று வாக்குறுதிகளை அளித்தார்.

1. ஒரு நாட்டை உனக்கு உரிமையாக்குவேன்.
2. உன்னைப் பெரிய இனமாக்குவேன்.
3. உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்.

இஸ்ரயேல் மக்களை எகிப்து நாட்டு அடிமைத்தனத்தில் இருந்து மோசேயின் தலைமைத்துவத்தின் கீழ் உடன்படிக்கை நாட்டுக்கு அழைத்துச் சென்று இறைவன் தமது வாக்குறுதியை நிறைவேற்றினார்.

## உமது வாழ்க்கைக்கு...

### தலைமைத்துவத்தின் வாக்குறுதிகள்

* உமது வகுப்பறையிலுள்ள சக மாணவர்களின் நன்மைகளை மட்டும் மனதில் கொள்ளுங்கள்.
* அவர்களின் தனித்துவத்திற்கு மதிப்பளியுங்கள்.
* இரக்கத்துடன் செயற்படுங்கள்.
* அனைவர் மட்டிலும் நீதியுடன் செயற்படுங்கள்.
* எந்நேரமும் சமாதானத்தை அளிக்கவும் சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கவும் முற்படுங்கள்.
* ஒவ்வொருவரையும் பற்றி அறிந்து அவர்கள் செய்யும் நன்மைகளுக்காக அவர்களைப் பாராட்டுங்கள்.

## உங்கள் நினைவிற்கு

- ❒ இறைத்திட்டம் நிறைவேறுவது மனிதனின் திட்டப்படியல்ல. இறைவனின் திட்டப்படியேயாகும்.
- ❒ இறைவன் தனது வாக்குறுதியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக குறையுள்ள, பலவீனமுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்தார். (உ+ம்: யாக்கோபு, மோசே)
- ❒ நாம் செய்த பிழைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- ❒ செய்த பிழைகளுக்காக மன்னிப்புப் பெற வேண்டும்.
- ❒ வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.
- ❒ தமக்குக் கிடைத்த அழைப்பிற்கு நேர்மையாகப் பதிலளிக்கவேண்டும்.
- ❒ இறைவன் மட்டில் உண்மையான விசுவாசத்துடன் செயலாற்ற வேண்டும்.

## இவற்றை உங்களால் செய்ய முடியுமா?

1. ஆபிராமின் வாழ்க்கையிலிருந்து நீர் பெறக்கூடிய தலைமைத்துவத்தின் பண்புகள் ஐந்து தருக.

2. "ஆபிராம் தமது அழைப்பிற்கு பதிலளிக்கும்போது அறிவைவிட மனதிற்கே முதலிடம் அளித்தார்." இதிலிருந்து நீர் விளங்குவது என்ன?

3. நீர் உமது வாழ்க்கையில் வாக்குறுதிகளை நிறைவேற்றிய சந்தர்ப்பங்கள் மூன்றை விபரிக்குக.